# சிகாகோவில் பரதம் ~ சிறப்புக் காட்சி

வேறு ஒரு அறிவோ, சிற்பமோ, கலையோ கிடையாது, நாட்டியத்தில் இல்லா விட்டால் ~ என்பது ஒரு பழங்கால இந்திய வாக்கு. அந்த சொல்லுக்கு ஏற்ப பரதம் டான்ஸ் அகடமி தனது பரத நாட்டிய சிறப்புக் காட்சியை இந்த மே 13ம் தேதி, யு. எஸ், சிகாகோவில் உள்ள லெமாண்ட் கோவிலில் அளித்தது. எழுபதுக்கும் மேற்ப்பட்ட மாணவிகளை 18 நாட்டியங்களில் பரதம் சிறப்பாக காண்பித்தது. ஐந்து வயது சிறுமியிலிருந்து வயதில் மூத்தவர்கள் வரை ஆடிய நாட்டிய உறுப்படிகளை உருவாக்கியவர், பரதம் டான்ஸ் அகடமி இயக்குனர் திருமதி வனிதா வீரவல்லி. மாணவிகள் நாட்டியத்தின் ஊடே போயிருப்பதை விட, நாட்டியமே மாணவிகளின் ஊடே போயிருக்கிறது என்று பார்த்தவர் எவருக்கும் வெளிப்படையாகவே தோன்றியது.

முதல் படைப்பான நிருத்த அஞ்சலியிலிருந்தே தெளிவாய்த் தெரிந்தது நாட்டிய நிகழ்ச்சியின் போக்கு எவ்வாறு இருக்கும் என்று. அதற்கு அடுத்தது முதிய மாணாக்கர்கள் ஆடிய ~ நர்த்தன கணபதி. நாட்டை ராகத்தில் அமைந்த இந்த படைப்பில் மகிழ்ச்சியுடன் ஆடும் விநாயகக் கடவுள் காண்பிக்கப் பட்டார். அடுத்த உருப்படியில் புது மாணவிகள் அடவுகளை ஆடிக் காண்பித்தனர். இந்த இரண்டு நாட்டியத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் பளிச்சென்று தெரிந்தது. சிலர் ஐந்து வயதே ஆனாலும், புது மாணவிகளின் கண்களில் உறுதியும், வருங்கால வாக்கும் நன்றாய்த் தெரிந்தது. நடனம் ஆடியவாகள் எல்லாரும், காத்திருந்து பொறுமையாய் நாட்டிய உடை, நகைகளை அழகாய் அணிந்து கொண்டிருந்தனர். அம்சமாய் இருந்த தோற்றத்துக்கும், சுருசுருப்பாய் சென்ற நிகழ்ச்சிக்கும் காரணம் பரதம் பள்ளி, மாணவிகளைப் பெற்றோர்கள் மற்றும் வனிதா வீரவல்லி என்று தெள்ளத்தெளிய தெரிந்தது.

நிகழ்ச்சியில் சில நடனங்கள் முழுவதும் நிருத்தியமாகவும், மற்றவை சில சாகித்தியம் கூடிய கதைகளாகவும் சேர்ந்து கச்சிதமாய் அமைந்திருந்தது. முதல் வகையறாவில் அமைந்தவை ~ வாத்திய லஹரி, ஜதீஸ்வரம், தில்லானா முதலான நடனங்கள். கதைகள் இந்து மத புராணத்தில் இருந்து எடுத்தவை ~ ஸ்ரீகிரி சங்கரராய் எழுந்தருளிய சிவபெருமான் கதை, சிவகாம சுந்தரியின் மீது எழுதிய பாடல் மற்றும் முருகன் வேண்டுதல்.

நிகழ்ச்சியின் இரண்டாவது பாகத்திற்குப் முக்கியப் பொருள் ~ கிருஷ்ண பகவான் வாழ்வு. அதற்கேற்ப முதலில் ஒரு அஞ்சலி. பின்பு, மீரா, கிருஷ்ண கானம், கோபியருடன் லீலைகள், கோவர்தன மலை தூக்கல், சிறு பிராயத்து விளையாட்டுகள், மஹாபாரத காட்சிகள் நாட்டிய வடிவில் சித்தரிக்கப் பட்டன. இப்பகுதியில் வந்த ஒரு தலை சிறந்த நடனம், மேரியன் மனாட் தனியாக ஆடிய பாரதியார் பாடல் ~ சின்னஞ்சிறு கிளியே. ஒரு தாய் எப்படி தன் குழந்தையை கண்ணனாக பாவிக்கிறாள் என்று மேரியன் அற்புதமாய் காட்டியது, எல்லாத் தாய்களுக்கும் ஒரு அன்னையர் தின பரிசாய் அமைந்தது.

திருமதி வனிதா வீரவல்லி, சென்னை கலாக்ஷேத்திராவிலும், கலைமாமணிகள் இந்திரா ராஜன் மற்றும் முனைவர் சரஸ்வதியிடமும் பரதம் பயின்ற தலை சிறந்த நடன விற்பன்னர். அப்பேர்ப்பட்ட மூல சுனைகளில் இருந்து நாட்டியக் கலை தற்கால சிகாகோ இளைஞர்களுக்கு செல்வதைப் பார்த்து யாவரும் பெருமிதம் அடையலாம். தியாகராஜரைப் பற்றி ஒரு முழு நீள நாட்டிய நாடகத்தை தொகுத்து அரங்கேற்றிய வனிதா வீரவல்லிக்கு இந்த சிறப்புக் காட்சி ஒரு நல்ல பின் தொடர்.